**பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்த இந்தப் பகுதியில் இந்த வாரம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்...**



23

# இடம் பொருள் கலைஞர்






# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

## பேரறிஞர் கண்ட கலைக்கழகம்!

‘சொன்னதைச் செய்வோம், செய்வதையே சொல்வோம்’ என்பது கழகத்தின் கொள்கை முழக்கம். மன்னராட்சிக் காலத்தில் மன்னர்களின் கட்டளையே, திட்டங்களாவது போல, மக்களாட்சிக் காலத்தில், கழகம் அளித்த வாக்குறுதிகள்தான் தமிழ்நாட்டின் வளர்ச்சி வாசலைத் திறந்து வைத்தன. தமிழ்நாட்டின் தலையெழுத்தையே மாற்றிய கழகம், தமிழுக்கு வளம் சேர்க்காமல் இருக்குமா?

தொன்மைச் சிறப்புகள் கொண்ட தமிழுக்குச் செம்மொழி மதிப்பு கிடைக்கும் வரை ஓயாது குரல் கொடுத்த நமது கலைஞர், தனது முதல் ஆட்சிக் காலத்தில் மொழிக்குச் சூட்டிய பூமாலைதான் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.

### பேரறிஞர் அண்ணாவின் கனவு!

மொழிக்கும் நிலத்துக்கும் சுயமரியாதைக்கும் அதிகாரப் பரவலுக்கும் குரல் கொடுத்த கழகம், ஆட்சியில் அமர்ந்ததும் உலக அரங்குக்கு மொழியை எடுத்துச் செல்லும் முயற்சியாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கண்டது. 1968-ஆம் ஆண்டில், நடைபெற்ற இரண்டாம் உலகத் தமிழ்மாநாட்டில் உரையாற்றிய முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா, “தமிழுக்கென உயர் மைய ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றைத் தொடங்க வேண்டும். குறிப்பாக, ஃபிரான்ஸ் நாட்டில் அமைந்துள்ள ஃபிரெஞ்சு மொழி கலைக் கழகத்தைப் போல அமைக்க வேண்டும்” என தனது எண்ணத்தை வெளிப்படுத்தியதுடன், அதை அங்கேயே அறிவிக்கவும் செய்தார்.

அதற்கு முன்பு தமிழறிஞர் தனிநாயகம் அடிகள் போன்றோர் இந்த முயற்சியை முன்னெடுத்தாலும், தமிழ்நாடு அரசே அந்தப் பணியைத் தனது தலையாயப் பணியாக எடுத்துக் கொண்டது.

அண்ணாவின் சொல்லைத் தட்டாத அவரது தம்பி முத்தமிழறிஞர் கலைஞர், 1970-ஆம் ஆண்டில் இந்த நிறுவனத்தைத் தொடங்கினார். முன்னதாக அந்த ஆண்டில், பாரீசில் நடைபெற்ற மூன்றாவது உலகத்தமிழ் மாநாட்டின்போது, யுனெஸ்கோவில் இந்த நிறுவனம் குறித்து ஒரு தீர்மானத்தைக் கொண்டு வந்தார் மால்கம் ஆதிசேஷையா. தமிழாராய்ச்சி என்கிற வகையில், இந்தியாவின் பிற மாநிலங்களிலும், பிற நாடுகளிலும் நடக்கும் தமிழாராய்ச்சிகளின் மையமாக இந்த நிறுவனம் திகழ வேண்டும் என நிறுவனத்தின் கொள்கை வகுக்கப்பட்டது.

1970-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, தற்காலிக இடத்தில் செயல்பட்டு வந்த நிறுவனத்துக்கு, சென்னை தரமணியில் ஐ.ஐ.டி. அருகே இடத்தை ஒதுக்கி, 1972-ஆம் ஆண்டில் புதிய கட்டடத்தைக் கட்டி அளித்தார் கலைஞர்.

> **ப**ழந்தமிழர்களின் வாழ்வியல் காட்சிக்கூடமும் இங்கு அமைக்கப் பட்டுள்ளது. இந்தக் காட்சியகத்தில் சுடுமண் சிற்பங்கள், சுதைச் சிற்பம், படிமங்களாக வடிவமைக்கப் பட்ட கலைப் பொருட்கள் ஆகியவையும் உள்ளன. சுவடியியல் பாதுகாப்பு மையமும் இங்கு அமைந்துள்ளது.

### ஆய்வுக்குப் பாதையிட்ட நிறுவனம்

தமிழ் இலக்கிய வரலாறு, சமகாலத்தில் பேசப்படுவது மட்டுமல்ல, சங்ககாலம், அதற்கு முந்தைய கற்காலம் என தமிழர்களின் தொன்மையை, பண்பாட்டை நோக்கிப் பயணப்பட வேண்டும். அந்தப் பயணங்களுக்கு ஏற்ப, தமிழ் ஆய்வுகளை வளப்படுத்துதல், தமிழ் ஆய்வாளர்களுக்குத் தேவையான ஆவணங்களை உருவாக்குதல், தமிழ் மொழியின் சிறப்புகளை, செழுமையை உலக அரங்குக்கு எடுத்துச் செல்லுதல், உலகத் தமிழறிஞர்களிடையே தொடர்பை உருவாக்குதல் என்பவை இந்த நிறுவனத்தின் முதன்மை நோக்கமாக உள்ளன.

அறிவியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுவது போன்று, தமிழ், தமிழர் பண்பாட்டில், ‘இருப்பதைக் கொண்டு இன்னொன்றைக் கண்டுபிடிப்பது’ என்பது இந்த நிறுவனத்தின் நோக்கம். குறிப்பாக, அதிகம் தெரியாத ஒன்றைக் கண்டுபிடித்துச் சொல்வது என்று சொல்லலாம். சிறிய வளையல் துண்டு ஒன்றை வைத்துக் கொண்டு நமது பண்பாட்டை நோக்கித் தேடிச் செல்வது, ஆதிகால அடையாளங்கள் சிலவற்றை வைத்துக் கொண்டு கீழடி அகழாய்வு, அருங்காட்சியகம் வரை எல்லாம் சென்றிருக்கிறோமல்லவா... இதைத்தான் பண்பாட்டு ஆராய்ச்சி என்கிறோம்.

நமது இன்றைய பண்பாட்டுப் பெருமைகளுக்கு எல்லாம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் பங்களிப்பும் ஒரு காரணம் என்று சொல்லலாம். ஆனால், “கலைஞர் ஆட்சியில் இருந்தபோது மட்டும்தான், இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் முறையாக இருந்தன. இந்த நிறுவனத்துக்கான இயக்குநர்கள் நியமனத்தில் அறிஞர்கள் நியமிக்கப்பட்டனர். தி.மு.க. ஆட்சி அல்லாத காலங்களில், அரசியல் தொடர்புடையவர்கள் இயக்குநர்களாக நியமிக்கப்பட்டதால், இந்த நிறுவனத்தின் நோக்கமே சிதைக்கப்பட்டது” எனக் குறிப்பிடுகிறார் இந்த நிறுவனத்தின் இயக்குநராகப் பொறுப்பு வகித்த, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் ம.ராசேந்திரன்.

### திராவிட இருக்கைகள்

கூட்டுறவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் கீழ், இந்நிறுவனம் செயல்பட்டு வருகிறது. தற்போதுவரை 40 ஆய்விருக்கைகள் இங்கு உள்ளன. சமூகநீதி, பகுத்தறிவு, திராவிட இயக்கம் சார்ந்து அதிக இருக்கைகள் கொண்ட கல்வி நிறுவனமாக இது திகழ்கிறது. தமிழுக்குச் செம்மொழி மதிப்பினை கலைஞர் பெற்றுத் தந்தபோதும், அதற்கான மாநாட்டுப் பணிகளின் போதும் இந்த நிறுவனத்தின் பங்களிப்பு முக்கியமானதாகும்..

முதுகலைத் தமிழ், முனைவர் பட்ட ஆய்வுகள், ஆய்வியல் நிறைஞர் பட்டப் படிப்புகளையும் இந்த நிறுவனம் வழங்கி வருகிறது. இந்த நிறுவனத்தின் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட தலைப்புகளில் ஆய்வு நூல்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

> ### தமிழறிஞர்களின் ராஜபாட்டை
>
> இந்த நிறுவனத்தின் செயல்பாடுகளில் தனிப்பட்ட அக்கறையும் கொண்டிருந்தார் கலைஞர். அவர் ஆட்சியில் அமர்ந்த காலங்களில் எல்லாம், இந்த நிறுவனத்தின் இயக்குநர்களாகப் புகழ்பெற்ற தமிழறிஞர்கள் நியமிக்கப்பட்டனர். தமிழறிஞர்கள் கா.மீனாட்சிசுந்தரம், ச.வே.சுப்பிரமணியம், சிலம்பொலி செல்லப்பன், ம.ராசேந்திரன், கே.ஏ.குணசேகரன் போன்றவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். புதிய கட்டிடம், பணியாளர்களுக்கு ஆய்வாளர்களுக்கு ஒய்வூதியம் கொடுத்தவர் கலைஞர்.

### உயிர்பெறும் கலைக்கழகம்

தற்போது நமது கழக அரசு பொறுப்பேற்ற பின்னர், இந்த நிறுவனத்தின் செயல்பாடுகள் புதிய வேகம் எடுத்துள்ளன. நிறுவனத்தின் நோக்கத்தைப் புதுப்பித்ததுபோல தமிழ்நாடு முழுவதும் பழந்தமிழ் ஓலைச்சுவடிகள், செப்பேடுகள் என நமது இலக்கியச் செல்வங்களைத் தேடிப் பயணப்படத் தொடங்கி இருக்கின்றனர் ஆய்வாளர்கள்.

தமிழ்நாட்டில், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள முக்கிய கோயில்களில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட பழந்தமிழ் செல்வங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஆவணப்படுத்தி, பதிப்பிக்கும் வேலைகள் நடந்து வருகின்றன.

“ஃபிரான்ஸ் நாட்டில் ஃபிரெஞ்ச் மொழிக்கு உள்ளதுபோல, தமிழ் மொழிக்கும் கலைக் கழகம் வேண்டும்” என அண்ணா கனவு கண்டார். **கலைஞர் அந்தக் கனவுக்கு உயிர்கொடுத்தார். நமது முதலமைச்சர், அந்தக் கலைக்கழகத்தை இன்னும் உயரத்துக்கு எடுத்துச் செல்கிறார். கீழடி அருங்காட்சியகமே அதன் சாட்சி. அது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் நீட்சி.**

...வலம் வருவோம்

---



## வெற்றிப் பரிசு விமானப் பயணம்!

**ந**ம் முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசு, அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு ஊக்கமூட்டி வரும் அதே வேளையில், சில அரசுப் பள்ளிகளின் தனிமுயற்சிகளும் மாணவர்களின் திறனை மேம்படுத்துகின்றன.

சமீபத்தில் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்காக ஒன்றிய அரசு நடத்தும் என்.எம்.எம்.எஸ் என்ற திறனறித்தேர்வில், வேலூர் மாவட்டம், அணைக்கட்டு ஒன்றியம், கும்பல்கொட்டாய் கிராம நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவர் கணேஷ் தேர்வாகியுள்ளார். அந்த வெற்றிக்குப் பின்னால் அப்பள்ளி ஆசிரியர்கள் அனைவரது பெரும் உழைப்பும், சுவாரசியமான ஒரு பந்தயமும் அடங்கியுள்ளது.

இத்தேர்வில் வெற்றிபெறும் மாணவ மாணவியர் சென்னை-பெங்களூரு விமானத்தில் அழைத்துச் செல்லப்படுவர் என்பதுதான் அந்தப் பந்தயம். விமானத்தில் செல்ல வேண்டும் என்ற லட்சியத்துடன் பத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் இத்தேர்வில் பங்கேற்றாலும், கணேஷ் என்ற மாணவர் மட்டுமே தேர்வாகி இருக்கிறார். அவரது விமானப் பயணமும் அப்பள்ளி ஆசிரியர்களால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதன் மூலம் அப்பள்ளியைச் சேர்ந்த பல மாணவர்கள் ஊக்கம் பெற்று, அடுத்தாண்டு வரவிருக்கும் தேர்வுகளுக்குத் தயாராகத் தொடங்கியுள்ளனர். மாணவர்களைக் கனவு காணச் செய்து அவர்களின் ஆசையை நிறைவேற்றிய **‘கனவு ஆசிரியர்கள்’** என்று இவர்களைப் பாராட்டினால் தகும்.

## ஃப்ளாஷ்பேக்





பத்மாவதி

### கவிதைப் படம்!

**பு**ரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நூற்றாண்டு விழா கவிதைப் போட்டியில் பரிசுபெற்ற நூறு பேரில் என் கணவர் வெற்றிப் பேரொளி உட்பட திருக்குவளை, திருவாரூர் பகுதிகளைச் சேர்ந்த ஐந்து கவிஞர்கள் அடங்குவர். பரிசளிப்பு விழா நடைபெறும் முன்பே, கழக ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. ஆனால், தலைவரிடம் வாழ்த்தைப் பெற்ற பிறகே, பரிசு பெறச் செல்வோம் என்ற உறுதியுடன், அண்ணா அறிவாலயத்தில் தலைவரிடமும் பேராசிரியரிடமும் வாழ்த்தினைப் பெற்றோம். கண் அறுவை சிகிச்சை முடிந்த நிலையிலும் எங்களை வாழ்த்தி, புகைப்படமும் எடுத்துக்கொள்ள அனுமதி தந்தார் தலைவர் கலைஞர். தலைவருடன் என் கணவரும் நானும், எங்கள் மகன் கபிலனும் இருக்கும் இந்தப் படத்தை நாங்கள் பொக்கிஷமாகப் போற்றி வருகிறோம்.


**-கவிஞர் ஜெ.பத்மாவதி,**
**திருக்குவளை, நாகப்பட்டினம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை- 600 018. வாட்ஸ்அப் எண்: 90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

> ### கருவூலம்
>
> ### தேர்தல் போராட்டம்!
>
> **1957-ஆம் ஆண்டு தேர்தல்தான், இந்தியாவில் ஜனநாயகப் பாரம்பரியம் நிலை நாட்டப்பட்ட தேர்தலாக இருந்தது. நாட்டுநலனில் அக்கறை கொண்ட எதிர்காலத் தலைமுறையினர் முதன்முறையாக தேர்தல் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர். அந்த வகையில், இந்தியாவில் இன்று காணப்படும் உரிமை உணர்வுகளுக்கும், ஜனநாயகப் பெருமைகளுக்கும் முன்னோடியாக இருந்த பேரறிஞர் அண்ணா, பரம்பரை கௌரவம், அதிகாரத்தை உடைத்து, சாமானியர்களும் ஜனநாயகத்தில் உரிமை கொள்ள முடியும் என்றார். கழகம் முதன்முதலில் தேர்தலில் நின்றபோது, அதையும் போராட்டக்களமாகவே நினைத்துப் பணியாற்ற வைத்தார்.**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 156




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131